# உதயதாரகை.—MORNING STAR.

*Published on the 2d and 4th Thursday of every Month at one shilling a Quarter payable in advance.*

ந. புந். சஞ்சிகை அ.] சுபானு ௵. சித்திரை, உஎ. தேயதி வியாழக்கிழமை, Thursday, April, 27. 1843. [VOL. III. No. 8.


## வேதியரொழுக்கம்.

## ௬ ம். அதிகாரம்.

### தன்னைக் காக்கப் புறத்தியாரை மறவாதிருத்தல்.

### Care for others essential to personal piety.

போன அதிகாரத்திற் சொன்னதைப் பார்த்துச் சிலரே மிகவும் அஞ்சி இந்தத் தொழிலில் வழுவி விழும்படிக்கத்தனை இடமுண்டாகையில் இதை நாம் செய்வதென்ன புறத்தியாரைக் கரையேற்றுவதுத்தமபுண்ணியந்தானே. ஆகிலும் மற்றவர்கள் கரையேற வருந்தி நாமே கெட்டுநரகத்தில் விழவிடஞ்செய்வதைப் பார்க்க இந்தத் தொழிலை விட்டுத் தனியே நாம் கரையேறச் சஞ்சலமின்றிப் பிரயாசப்படுவது நல்லதென்று நினைப்பார்கள். ஆகிலும் ஆண்டவர் விசேஷமான தயையோடுங்களைத் தெரிந்து தாமே மனிதனாய்ச் செய்த தொழிலையுங்களுக்கிட்டு நீங்களுஞ் சம்மதித்ததைக் கைக்கொண்ட பின்பு மனதிலஞ்சி இடையிற் பின்வாங்கினால்லவோ? இதை நன்றாய்ப் பார்க்கிற் பாவத்துக்கச்சமல்ல. படவேண்டிய பிரயாசத்துக்கஞ்சிச் சோம்பலினாலே நினைத்ததப்பிதமென்று தோன்றப்படுமே. அப்படியானால், நீங்கள் நினைவிலன்றி நிலைமையிலும் இதனாற் கேடு விளையுமென்றிருக்கிறோம். அதெப்படியென்றால மத்தேயு, லூக்காவென்றிருவர் எழுதினபடி துரை ஒருவன் மூன்று பேர்களைத் தெரிந்து தன கைப்பொருளிலொருவற்கையாயிரம் ஒருவற்கீராயிரம் மற்றொருவற் கோராயிரம் பொன தந்து வியாபாரஞ் செய்யச்சொல்லிப் போனான். முன்சொன்ன இருவரப்படியே வாங்கிக்கொண்டு திரவியம் ஆதாயமாகவரச் செய்து மற்றொருவன் வியாபாரத் தொழிலிலே கள்ளர் முதற்பல விக்கினங்களினாற் கேடுவந்தாலும் வருமென்றஞ்சிவாங்கின பணங்களைப் பதனமாய்ப் புதைத்துவைத்தான். நெடுநாட் போனபின்பு துரையும்வந்து மூவரையுமழைப்பித்துச்செய்தியைக் கேட்க ஒருவன் நின்று நீர் தந்த ஐயாயிரம் பொன்முதலாக வைத்து மற்றையாயிரமாதாயமாகக் கண்டதென்றான். அவனைத் துரை புகழ்ந்து வெகுமானமுஞ் செய்து தன்னோடே வாழவரச்சொன்னான். அப்படியே வேறொருவன் நீர் தந்த ஈராயிரம் பொன் நாலாயிரமாக வியாபாரத்திலே வர்த்தித்ததென்று வைத்தவிடத்தில் ஒத்தவரிசை பெற்று மகிழா நின்றான். மற்றொருவனோவெனில் முதலிலே கேடுவருமென்று சந்தேகப்பட்டுக் கேடுவந்தால் நீர் தரும் ஆக்கினைக்கஞ்சி உமது பணத்தினைப் பத்திரமாகப் புதைத்து வைத்தேன். இதோ குறையாமற் கொண்டுவந்தேனென்று தொழுது முன் வைத்தான். துரை அதற்கவனை மிகவுங் கோபித்து நடக்காதாயங் காண உனக்குத் தந்த பொருளைக் கைக்கொண்ட பின்பு வீணச்சத்தால் மெய்யான சோம்பலை மூடிப் பயனொன்றின்றியதனை வைத்ததேதென்று நெறுநெறென பல்லைக் கடித்துக் கோவென்றலறி அழுவாரோசை முழக்குங் கொடிய சிறையிற் போடுவித்தான். இந்தக் கதையை யேசுநாதர் சொல்லி இத்தன்மைத்தாம் மோட்ச வியாபாரமென்றார். அர்ச்செய்சிஷ்டவகுஸ்தினோவெனில் இந்தக் கதையைச் சோம்பலினாலும் வீணச்சத்தாலும தன் தொழிலைச் செய்யாமற் கிடக்கும் உபதேசிகளைக் குறித்துக் காட்டுமென்று பின்பு சொன்னதாவது, வேறொரு குற்றமின்றி வாங்கின பொருளை அழியவிடாமலுந் தான் தின்னாமலும் சம்பதித்துக் கைக்கொண்ட பொருளால வியாபாரஞ் செய்யாமல் ஆண்டவனுக்காதாயங் காட்டாத சோம்பலினால் மாத்திரம் அவனுக்கு வந்த ஆக்கினையைக் கண்டு மற்றவர்கள் நடுங்கக் கடவார்களென்றார். அப்படியும், நீயும் ஆண்டவர் தந்த நினைவினாலுபத்தியாகத் திருச்சபைக்கூழியஞ் செய்து மற்றவர்களையும் மோட்சகரையிலேற்ற இந்தத் தொழிலைக் கைக்கொண்ட பின்பு சஞ்சலத்துக்கஞ்சிச் சோம்பலாக மூலையிற் கிடக்கவேணுமென்றாலாண்டவர் விடுவாரோவென்ன, ஆண்டவர் தேடுந் திரவியமாக ஆத்துமங்களை அவருக்குச் சேர்க்க உனக்குத் தந்த புத்தியும் அறிவும் மற்றுண்டாகிய நன்மையுதவியும் பாவத்துக்குதவச் செய்யாதே போனாலும் அதுகளைப் புதைத்தாற்போலவுமாகுமெனவும் புறத்தியாரையும் ஆண்டவர் பாதத்திற் கொண்டுவிடச் செலுத்தாதே போனால் இதிலே மாத்திரமவராக்கினைக்குள்ளாவதற்குச் சந்தேகமில்லை. அர்ச்செய்சிஷ்ட பிறஞ்சிஸ்குச் சபையிலுட்பட்ட சந்நியாசியொருவர் அஞ்ஞானிகளுக்குச் சத்திய வேதத்தைப் போதிக்க நெடுநாட் பிரயாசப்பட்ட பின்பு சஞ்சலமின்றித் தன்னாத்துமத்தை விசாரித்து நல்ல மரணத்துக்காயத்தஞ் செய்யவேணுமென்று தாமந்தத் தொழிலை விட்டு வேறொரு மடத்திலிருந்து புறத்தியாரை நினையாமற்றானே நிறையப் புண்ணிய பலன்களை அடைய அருந் தவஞ் செய்யத்தொடங்கினார். அப்படியாகையில் அவருக்கு யேசுநாதர் சிலுவையின் மேலறையுண்டவுருவமாகத் தோன்றிச் சஞ்சலமில்லாமலுன் கருமஞ் சுகமே நீபார்த்திருக்க என்னை இந்தச் சிலுவையின் மேல்விட்டாயோவென்றார். அதற்கவர் நொந்து நாணிப் புறத்தியாருக்கு மோட்சவழியைக்காட்டிக்கொண்டு முன் செய்திருந்த தேவ தொழிலை விட்டதினால் அதை ஆண்டவர் சொன்னதென்றறிந்து மீண்டு போய்த் தன்னாலானமட்டும் எல்லாரையுங் கரையேற்ற மரணபரியந்தம் பிரயாசப்பட்டுத்திரிந்தார். அப்படியே மற்றொருவன் தன் ஆத்துமத்துக்குக் கேடுவருமென்றஞ்சி உபதேசித் தொழிலை விட்டுத் தனித்திருந்து தவத்தைச் செய்ய நினைத்தான்.

ஒருநாள் அவன் யேசுநாதர் பாடுபட்ட வர்த்தமானத்தை வாசித்துத் தியானித்திருக்கையில் யூதர்கள் வந்து கர்த்தரைப் பிடித்தபோது கூடநின்ற சீஷர்களெல்லாருமோடிப்போனதை வாசித்துப் பகைவர் கையிற்றனி நின்ற யேசுநாதர்மேல் இரக்கமுஞ், சமயத்துக்குத் தம்முட் குருவானவரைக் கைவிட்ட சீஷர்மேற் கோபமுமிக்கதாகி அழுதுகொண்டிருந்தான். அப்போது யேசுநாதர் அவன் மனதிலே சொன்னதாவது அந்தச் சீஷர்களை நீ கோபித்ததென்ன? அப்படியே நீயுஞ் செய்தாயல்லவோ? என்மேலுனக்கிரக்கமானால் அஞ்ஞானிகள் கையில் என்னை ஒப்புக்கொடுத்தோடிப்போனாற்போல நீ உபதேசித்தொழிலை விட்டுவருவாயாவென்றார். அவனும் இதைக் கேட்டுள்ளத்துருகி நாணித் தானினைத்த புண்ணியம் அபத்தமென்று கண்டு மீளவும் உபதேசஞ் சொல்லிக்கொண்டு பகைவர் கையில் அகப்பட்ட கர்த்தரை மீட்டாற்போல அஞ்ஞானத்தினின்ற ஆத்துமங்களைத் திருப்பி மோட்ச வழியிலே நிறுத்தப் பிரயாசப்பட்டுக்கொண்டிருந்தான். இதெல்லாம் வாசித்த பின்பு நீங்களும் கர்த்தருக்குப் பிரியமுள்ள இந்தத் தேவதொழிலைக் கைவிடாதியன்றமாத்திரமுத்தம முறையால் நடப்பத் துணிவதுந் தவிர அதனாலே வந்த அச்சமுந் தெளியுமென்றிருக்கிறோம். அதெப்படியென்னில், ஆண்டவருக்கு வேண்டி அவரிறக்கிரட்சித்த ஆத்துமங்களைப் பசாசடிமையினின்று மீட்க அவரேவினபடியே நீங்கள் திரியும்போது வரும் விக்கினங்களினுங்களுக்கு மோசம வராமல் அவரே காப்பாரென்று சற்றுமஞ்சாமல் நம்பியிருப்பது நியாயமல்லவோ? இதனால் யேசுநாதர் அப்போஸ்தலரை உபதேசஞ் சொல்ல அனுப்பினபோது திருவுளம்பற்றினதாவது, பூவுலகமுடியுந்தனையு நாமே உங்களோடே கூடநிற்போமாகையால எங்கும் போயெல்லாருக்கும் உபதேசஞ் சொல்லுங்களென்றார். இதனைப் பற்றி அர்ச்செய்சிஷ்ட இஞ்ஞாசியார் எவரும் அதிசயப்பட ஒரு வசனஞ் சொன்னதாக அவர் சரித்திரத்திலெழுதியிருக்கும். அதெதெனிற் பல சந்நியாசிகள் கூடவிருக்கையிலொருநாள் அவர்களிலொருவரை நோக்கி இஞ்ஞாசியார் கேட்டதாவது, பராபரன் சித்தமாகி நீ வேணுமென்றுடனேசெத்து மோட்சத்தை யடைவாய். அல்லதின்னஞ் சிறிது நாளிங்கேயிருந்தாயாகில அநேகம பேர்களைக் கரையேற்றுவாயாகிலும் அப்போது மோட்சமடைவாயென்றிப்போது நிச்சயமில்லையென்று நீ சாவுமளவிலிருந்ததற்குத் தக்கதாய்த் தீர்வைபடுவோமென்று திருவுளம்பற்றவந்தால இவ்விரண்டிலேது நீ உனக்குத் தெரிந்து கொள்வாயென்று கேட்டார். அதற்கந்தச் சந்நியாசி சற்றுமாலோசனைசெய்யாமல இங்கே ஆத்துமத்துக்குள்ள விக்கினங்களைத் தப்பி உடனே மோட்சத்தையடைவது நல்லதென்பேனென்றார். இஞ்ஞாசியாரோவெனில நானிப்படியல்ல இன்னஞ் சிறிது நாளுயிரோடிருந்து ஆண்டவருக்குத்தோத்திரமாக அநேகம் பேர்களைக் கரை

Digitized by Google

யேற்றலாமென்று நிச்சயமாகவறிந்தேனாகில் அதின் பிறகு மோட்சமடைவேனோ இல்லையோவென்று சற்றும் பாராமல் ஆண்டவரை நம்பி அவருக்கூழியஞ்செய்து பலரைக் கரையேற்ற இன்னமிங்கேயிருக்க மனதாவேனென்றார். இதற்கு நியாயமேதெனில், ஒருவன் றனக்கிருந்த மோட்ச நிச்சயத்தை ஆண்டவருக்கிலேதோத்திரமாகக் கைவிட்ட பின்பு அவன் மோசம்போக அளவில்லாத தயையுள்ள சுவாமி பார்த்துக்கொண்டிருப்பாரோ, முன் சொன்ன நிச்சயத்திலும் பின்பவன் மோட்சத்தையடைவது நிச்சயமாகுமே. இங்கேதானே ஒரு ராசா தனக்குச் சீமைவிடவேணுமென்றிருக்கையால் அதற்கு முன்னே ராசாவுக்குப் பிரியவூழியத்தைச் செய்வதுவேண்டி உன்னுதாயத்தைப் பாராமல் அந்தச் சீமையை நீ கைக்கொள்ளாதேபோனால் சொன்ன ஊழியத்தை முடித்த பிற்பாடதைத் தருவாரோ? இல்லையோ? சந்தேகப்படக் கணக்குண்டோ? அதையும் அதிலே பெரிய சீமையும் பெரிய வரிசைகளும் உன் பட்சத்தைக்கண்டு தருவாரென்பது நிச்சயந்தானே. அப்படியே ஆண்டவருக்களுக்குத் தந்த தொழிலில் ஆத்துமத்துக்கு விக்கினம் வந்தாலும் எச்சரிக்கையோடிருக்கவேண்டியதொழியக் கேடுவருமென்றஞ்சி மயங்கவேண்டாம். புறத்தியார் சரீரத்துக்குதவிசெய்வார், ஆண்டவர் தாமே உதவியாக நிற்பாரென்றதுந்தவிர நடுத்தீர்க்கு நாளிலே மற்றத் தருமங்களை விட்டு நொந்தார்க்கு ஆறுதலும், பசிப்பார்க்கு உணவும், இல்லார்க் குடையுந் தந்ததற் கவரே மோட்சத்தைத் தருவாரென்று யேசுநாதர் திருவுளம்பற்றினதல்லோ.* இனிப் புழுத்தழியுஞ் சரீரத்திற்கு உதவிசெய்ததினால இத்தனை வரிசையும நன்மையும் வருமெனில் என்றும் அழிவில்லாத ஆத்துமத்துக்குதவிசெய்து புறத்தியாரையுங் கரையேற்றப் பிரயாசப்பட்டதற் காண்டவர் என்ன செய்யார்? இராசாமகனுக்கு முலைப்பால கொடுப்பவளுக்கு இராசாத் தனக்கேற்ற போசனம குறைவில்லாமற்றந்து பேணுவதுபோல ஆண்டவர் பிள்ளைகளாகிய மனிதரெல்லார்களுக்கும் ஞானப்பாலாகிய வேதவுணர்ச்சிகளை யூட்டி நீ பிரயாசப்பட்டுக்கொண்டிருக்கையில் ஆண்டவரும் தனக்கேற்ற தேவபோசனமாகிய தேவவரப்பிரசாதங்களை உனக்கு நிறையத் தருவார். நீ புறத்தியாருக்கு நலல உணர்ச்சிகளை விளைவிக்கவருந்துவதனவாக உனக்கு நல்லுணர்வுள் வினையும். நீ புறத்தியாரை நலலவராக்க வருந்துவதனவாக நீயே நல்லவனாவாய். உறையிற் கிடந்து கறைபட்டுக்கெடுங் கத்தி வெட்ட வெட்ட வொளி பெறுமல்லோ? பொற் பொருள்களை நெருப்பிச் சுடச் சுடத் தானே வளர்ந்து சுடரேறுமல்லோ? கிணற்றுத் தண்ணீரிறைக்க நீர தெளிந்தூறுமல்லோ? நானே புறத்தியார் கோபத்தையாற்றச் சொன்ன உபாயங்களில் என் கோபமுமாறுதே? கோபத்தையிழந்து பொற்காரணமாகிய சிற்றின்பத்தாசையால வருங் கேடுகளை நான் புறத்தியாருக்குக் காட்டினவிடத்தில நானும் அஞ்சாதிருப்பேனோ? புறத்தியாராசைபட அழியாத மோட்ச செல்வங்களை விரித்துக் காட்டின தன்மையால எனக்கும அதின் மேலாசை விளையாதிருக்குமோ? செங்கலவினைடத் தண்ணீர்கொண்டுவிடும் வாய்க்காலும் நனையாதோ? ஆயினும இன்னமதிகமாயதல்ல நீங்கள் தேறும்படிக்கு வேறே பலவகைகளுக்கு முதவியாமொரு நியாயத்தை யறியக் கடவீர்கள். ஆண்டவர பரம நீதிபரனாகையால ஒருவர்க்கொரு தொழிலைக் கட்டளையிடும்போது தற்குரிய உதவியும வலலமையுந் தருவாரில்லாவிட்டால நம்மாலொன்றுமாகாதென்று தாமறிந்திருக்க வேண்டிய உதவி அவர் செய்யாமல நம்மை ஏவினாராகில் அவருக்கு நீதியாகுமோ? நமக்குக் கருமமுடியுமோவாகையால வெவ்வேறு தொழிலுக்கு வெவ்வேறே உதவி அதற்கதற்குரிய முறையாலாண்டவர் செய்வது நிச்சயந்தானே. பூந்த வம்சவிருத்தியைத் தொழில வரமென்பார சந்நியாசிகள் தங்கள் விரதங் காக்கத் துறவு வரமும், இராசாக்கள் தங்கள் இராச்சியங்களையாளச் செங்கோல வரமும சம்சாரிகள் தங்கள் மனையாளை நெறிவிடாமல் நடத்தி வாழ்வலலறவரமும் பெறுவார்கள். இத்தொகை முதலான தொழில்களுக்கெல்லாம ஒவ்வொன்றிற்கொரு விசேஷித்த வரமே ஆண்டவரால் ஒவ்வொருவனுக்குங்கொடுக்கப்படுமென்பதற்குச் சந்தேகமில்லை. அப்படியே உபதேசஞ் சொல்ல ஆண்டவரொருவனைத் தெரிந்தபோது அவனுக்குபதேசிவரமே கொடுப்பார். இந்த வரமேதெனில், உபதேசித் தொழிலிற் செய்ய வேண்டிய யாவையுந் தனக்குப் பழுதவராமற் புறத்தியாருக்கு முதவிவரும்படிக்கொத்தமுறையோடு முடிக்க விசேஷ வல்லமை தரும் வரம் அதுவேயாகையால், உன்றொழில் நிமித்தமாக வேறொருவனுக்குப் பாவத்துக்கேதுவாயிருக்குமிடத்திற போனாலும் நீ கண்மூடவேணுமென்றொழியப் பாவத்தில் விழாதபடிக்கு விசேஷ வொத்தாசை உன்றொழில் வரத்திலுனக்குண்டாமே. அவனவன் தன்னிடத்தில் அனுதினம் சம்பவிக்குந் தவமை பார்க்கிறது தான் விளையாடப்பேசினவிடத்திற் றனக்குத் தீமை நினைவு சோதனை வந்ததன்மையாற் றன்னுபதேசித்தொழிலைச் செய்ய அவ்விடத்திற்றானே பேசினாலும அந்தச் சோதினை வரவுமில்லை. வந்தாலும் அதை யெளிதாய் மறுத்துத் தன்னாத்துமத்துக்கிதனாற் பழுதுவரவுமில்லையென்று காண்பான். இதப்படியாகையில இந்தத் தொழில நன்றாய் முடிப்பதரிதென்றும் இதிலே தப்பி விழுவதெளிதென்றுமஞ்சிப் பின்வாங்க நியாயமுண்டோ? நீயே முழுமனதோடு துணிந்து கர்த்தருனக்குச் செய்யும் விசேஷவுதவியை மறுத்தாலொழியப் பலரைக் கூட்டிக்கொண்டு மோட்சத்திற் சென்று விசேஷ வரிசை பெற்று வாழ்ந்திருப்பாயென்பது நிச்சயந்தானே.

௯ம். அதிகாரம் முற்றுப் பெற்றது.

---

* கடைசிநாளிலே குறிக்கப்பட்ட நன்மைகளைச் செய்தவர்கள் யாவரும மோட்சஞ் சேருவார்களென்றலல, வேதத்திற்கிணங்கிப் பூரண சற்குணத்தையுடையவர்களாய்ப் பிறருக்கு நன்மைகளைச்செய்தவர்களே கரையேறுவார்களென்று காட்டும்பொருட்டாய் அப்படிச் சொன்னாரென்பது மத்தேயு எழுதிய சுவிசேஷத்திலிருபத்தைந்தாம் அதிகாரத்தில் விளங்கும்.

## மகம்மது சமய நூல்.—AL-KORAN.—5.

(History of Abraham compared with that given by Moses.)

ஆபிரகாமுடைய சரித்திரத்தைக்குறித்துச் சொல்வியது.

### ௧. மோசே ௰௨. அதிகாரம். ௧ ௩.

௧. பின்பு பராபரன் ஆபிரகாமுடனே சொன்னது, நீ உன்தேசத்தையும் உன்னினத்தாரையும உன்தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு நானுனக்குக் காண்பிக்குந் தேசத்துக்குப் போ.

௨. நானுன்னைப் பெரிதான சனக்கூட்டத்துக்கு முதன்மையாக்கி உன்னை ஆசீர்வதித்து உன்பேரைப் பெருமைப்படுத்துவேன் நீ மற்றவர்களுக்கு ஆசீர்வாதம் வரும்படிக்கு ஏதுவாயிருப்பாய்.

௩. உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன் உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன் பூமியிலுள்ள வமிசங்களெல்லாம் உன் மூலமாய் ஆசீர்வதிக்கப்படுமென்றார்.

### மோசே. ௰௮. அதிகாரம். ௧—௨—௰—௰௨.

௧. பின்பு பராபரன் மம்ரேயினுடைய தோப்பிலே அவனுக்குப் பிரசன்னமானார் (எப்படியெனில்) ஒருநாள் அவன் உட்டணவேளையிற் கூடாரவாசலிலே உட்கார்ந்திருந்து,

௨. தன் கண்களை உயர்த்திப்

### கோறன். ௨. அதி. நடுப்பகுதி.

கருத்தர் ஆபிரகாமைச் சிலபல வார்த்தைகளைக்கொண்டு பரிசோதித்தபொழுது அவன் தவறாமல் நிறைவேற்றின காலத்தை நினைவுகூருங்கள். மெய்ப்பாகவே நான் மனிதசாதியினுடைய தேவபத்திக்கொரு முன்மாதிரியாக உன்னை ஏற்படுத்துவேனென்று கருத்தர் ஆபிரகாமுடன் திருவுளம் பற்றினார். ஆர் தங்கள் மனதில் மயக்கடிகொண்டார்களோ அவர்களேயல்லாமல் ஆபிரகாமுடைய மார்க்கத்துக்கு விரோதியாய்நிற்பவன் யாவன்? சத்தியமாகவே இவ்வுலகத்தில் நாம் அவனைத் தெரிந்து கொண்டோம். வரப்போகிற உலகத்திலேயோ, அவன் நீதியுள்ளவர்களில் ஒருவனாயிருப்பான். நீ உன்னைத்தானே எனக்கு ஒப்புக்கொடேனென்று ஆண்டவன் அவ

Digitized by Google

பார்த்தபொழுது மூன்று புருஷரும் அவனுக்கெதிராக நின்றார்கள் அவர்களைக் கண்டவுடனே அவன் கூடாரவாசலைவிட்டு அவர்களுக்கெதிர்கொண்டோடித் தரைமட்டுங் குனிந்து,

௩. ஆண்டவரே உம்முடைய திருக்கண்ணருள் எனக்குக் கிடைத்ததானால் நீர் அடியேனை விட்டுவிலகாதிருப்பீர்.

௭. மேலும் ஆபிரகாம் மாட்டுமந்தைக்கு ஓடி ஒரு நல்ல இளங்கன்றுக்குட்டியைப் பிடித்து வேலைக்காரன்கையிலே கொடுத்தான் அவனுமதைப் பாகம்பண்ணித் தீவிரப்பட்டான்.

௮. பின்னும் அவன் வெண்ணெய்யையும் பாலையுந் தான் பாகம்பண்ணின கன்றுக்குட்டியையும் எடுத்துவந்து அவர்கள்முன்பாக வைத்தான் ஆபிரகாமும் மரத்தின் கீழே அவர்களுக்கருகே நின்றான் அவர்கள் புசித்தார்கள்.

௯. அப்பொழுது அவர்கள் அவனை நோக்கி உன் மனைவியாகிய சாராளெங்கே யென்றார்கள்?

௰. அதோ கூடாரத்திலிருக்கிறாளென்றான் அதின் பின் அவர் சொன்னது ஒரு சீவ உற்பத்திகாலத்தருணத்திலே உன்னிடத்திற்குத் திரும்பிவருவேன் அப்பொழுது உன்மனைவியாகிய சாராள் ஒரு குமாரனைப் பெறுவாளென்றார். சாராள் அவனுக்குப் பின்புறமாய்க் கூடாரவாசலிலிருந்து அதைக் கேட்டாள்.

௰௧. (அக்காலத்திலே) ஆபிரகாமுஞ் சாராளென்பவர்கள் வயதுசென்று கிழவர்களாயிருந்தார்கள். இஸ்திரிகளுக்குள்ள தன்மை சாராளுக்கு நின்றுபோயிற்று.

௰௨. ஆகையால் சாராள் தன் உள்ளத்திற் சிரித்து நான் கிழவியும் என் எசமான் முதுமையுமானபின் எனக்கு இன்பமுண்டாயிருக்குமோவென்றெண்ணினாள்.

### மோசே ௨௧ அதிகாரம். ௧—௫.

௧. பின்பு பராபரன் தாமனுக்கிரகித்தபடியே சாராளைப்பார்த்தருளினார் பராபரன் தாமுரைத்தபடியே சாராளுக்கருள்செய்தார்.

௨. ஆதலாற் சாராள் கருப்பவதியாகி ஆபிரகாமுடைய முதுமையானவயதிலே தேவன் அவனுக்குச் சொல்லியிருந்தகாலத்திட்டத்தின்படி அவனுக்கொரு குமாரனைப்பெற்றாள்.

௩. அப்பொழுது ஆபிரகாம் தனக்குச் சாராளாற்பிறந்தகுமாரனுக்கு இசாக்கென்றுபேரிட்டான்.

௪. அந்தக் குமாரனாகிய இசாக்கு எட்டுநாட் குழந்தையானபொழுது ஆபிரகாம் தனக்குத் தேவன் கட்டளையிட்டிருந்தபடி அவனுக்கு விருத்தசேதனம்பண்ணினான்.

௫. ஆபிரகாமுக்குக் குமாரனாகிய இசாக்குப் பிறந்தபொழுது அவன் நூறுவயதுள்ளவனாயிருந்தான்.

னுக்குத் திருவுளம்பற்றின பொழுது, சராசரமனைத்தையும் படைத்த ஆண்டவனுக்கே நான் என்னை ஒப்புக்கொடுத்தேனென்று மறுமொழி பகர்ந்தான்.

### கோறன். ௰௧. அதி. நடுப்பகுதி.

நமது தூதர்கள் நற்செய்தி கொண்டு ஆபிரகாமிடத்துக்கு வந்து உன்மேல் சமாதானம் இருக்கக்கடவதென்று சொன்னார்கள். அப்பொழுது அவனும் உங்கள் மேற் சமாதானம் இருக்கக்கடவதென்று சொல்லி ஓடிப்போய்ப் பொரித்த கன்றிறைச்சியை எடுத்துக்கொண்டுவந்து அவர்கள் முன்னேவைத்தும் அவர்கள் தங்கள் கரங்களினால் அந்த இறைச்சியைத் தொட்டும் பாராததை அவன் கண்டபொழுது அவன் அவர்களில் வெறுப்புக்கொண்டு அவர்களுக்குப் பயந்தபொழுது பயப்படாதே என்றார்கள். ஏனென்றால், நாம் லோத்துவின் சனமண்டைக்கே அனுப்பப்பட்டோம். அவனுடைய (ஆபிரகாம்) மனைவியாகிய சாராள் அருகில்நின்று நகைத்தாள். நாங்கள் இசாக்கையும், அதன்பின் யாக்கோபையும் உனக்குத்தருவோமென்று அவளுக்கு வாக்குத்தத்தம்பண்ணின பொழுது, ஐயோ! விருத்தாப்பியாகிய நான் ஒரு புத்திரனைப் பெறுவேனோ? எனது புருஷனும் வயதுமுதிர்ந்தவராய்ப் போனாரே என்றாள். மெய்யாகவே இதொரு ஆச்சரியமான காரியமென்று அவள் சொன்னபொழுது பராபரனுடைய கட்டளையினால்வரும் பேற்றைப் பார்த்து ஆச்சரியப் படுகிறாயாவென்று தேவதூதர்கள் சொன்னார்கள். பராபரனுடைய இரக்கமும் அவருடைய ஆசீர்வாதமும் வீட்டுக்குச் சமசாரமாயிருக்கிற உன்மேல் இருக்கக்கடவது, ஏனென்றால் அவரே புகழப்படுவதற்குத் தகுந்தவர். ஆபிரகாம் தனது பயத்தைவிட்டு நீங்கித் தனக்கு இசாக்கென்பவன் பிறப்பானென்ற நற்செய்தி அவனுக்குக் கிடைத்தபொழுது அவன் லோத்துவின் சனத்தைக் குறித்து நம்முடன் பரிந்துபேசினான். ஏனென்றால் ஆபிரகாம் இரக்கமுள்ளவனும், தயாளமுள்ளவனும், தேவபத்தனுமாயிருந்தான்.

புறனடை.

பூமியிலுள்ள வமிசங்கள் எல்லாம் உன்மூலமாய் ஆசீர்வதிக்கப்படுமென்று பராபரன் ஆபிரகாமுக்குப் பண்ணின வாக்குத்தத்தத்தின் அருத்தமென்ன?

---

## ABBOTT'S LESSONS ON MORALS.

(Adapted to Hindu Readers.)

### *Lesson II.*—Justice.

Children can do injustice by their *thoughts.* When we hear complaints or accusations against any person, and readily believe them, without knowing what the accused might say in self-defence, we are generally *unjust.* Even when a person is very much to blame, he will generally appear less to blame when we understand the case fully, than he did after we had only heard what was said against him. We must therefore be careful, and not judge *hastily*; and we must not, even in our own minds, condemn the absent unheard.

We should not like, ourselves, to be judged and condemned thus; it is *unjust* for us to form opinions in this way in respect to others.

Thus there are many ways by which we may be *unjust*; and in all these cases the *injustice* may be *deliberate* and *wilful*, or it may arise from some error or bias of mind that we are unconscious of. If two boys named Sinnatamby and Pariatamby had determined to make a bower in the garden, but could not agree upon the place to build it, and should then conclude to refer it to their sister and let her decide which was the best place,—and if the older boy were to tell her secretly that he would give a plantain if she would decide in his favour and she should do it, while

Digitized by Google

yet the place chosen by the other brother was the best—she would be guilty of *deliberate, intentional injustice.* She would know very well that, in deciding in favour of one brother, for the sake of the plantain, she was doing *injustice* to the other, so that she would be doing *wilful wrong.*

But now, if, on the other hand, no bribe was offered to her, and yet if the older boy had been generally more kind to her, so that she loved him best, her partiality to him might blind her judgment, so that she might decide in his favour, without being conscious of any *intentional injustice* towards the other. Our feelings and wishes do thus in a thousand ways blind our minds, and lead us to be *unjust.* This is wrong, though it is not *deliberate and wilful wrong.* We ought to watch ourselves more carefully, and be on our guard so as not to be led astray by our own prejudices, or by the representations of our friends. This kind of injustice is therefore wrong, though *deliberate and intentional injustice* is much more criminal; and conscience is generally ready to make it known to us, more or less distinctly, when we are about to treat our companions in an *unjust* or *oppressive* manner, in either of these ways.

We are often under a great temptation to be *unjust*; but we shall always promote our happiness, as well as do our duty, by resisting it. It is true, that we can often gain something by violating the rights of our companions, by taking away some of their enjoyments, or imposing upon them more than their share of inconvenience or labour. But those who will make the experiment will find, that the satisfaction and happiness of *being just,* are far greater than any gain we can possibly derive from encroachments upon the rights of others.

### Questions on Lesson II.

How can we be *unjust* in our *thoughts?*
Is all *injustice deliberate* and *wilful?*
Can a person be *unjust* and yet not be sensible of it?
Relate the case of the two boys, who referred a question to their sister.
What is this intended to show?

---

## நன்நெறி.

### இரண்டாவது, நீதிநெறி.

பிள்ளைகள் தங்கள் எண்ணத்திலும் அநீதஞ் செய்யக்கூடும். எப்படியெனில், யாதாமொருவருக்கு விரோதமாய்க் கொண்டுவந்த குற்றச்சாட்டை அல்லது பிராதை நாம் கேட்டுவைத்துக்கொண்டு பிரதிவாதி தன் பட்சத்துக்காகச் சொல்லும் காரியத்தைக்கேளாமல் வாதிகள் மாத்திரம் சொன்ன காரியத்தை மாத்திரம் யாதாமொரு சிந்தனையில்லாமல் நம்பும்பொழுது நாம் பெரும்பாலும் அநீதஞ் செய்கிறோம். ஒருவன் குற்றத்துக்கேதுவாயிருக்கும்போதுதானும் அவனுக்கு விரோதமாகச் சொல்லப்பட்ட காரியத்தைக் கேட்டதின் பிறகு மாத்திரம் நாம் செய்வதிலும் அது காரியத்தை நாம் துலாம்பரமாய் அறியவரும்பொழுது அவன் பெரும்பாலும் சற்றே குற்றமற்றவனாய்க் காணப்படுவான். ஆகையால் நாம் எடுத்தடிமடக்காய் நியாயந் தீர்க்கவும்படாது, அல்லவென்று அந்தக்கணத்தில் அவ்வனமிருந்து தன் பட்சத்துக்குச் சொல்லாத காரியங்களையும் கேளாமல் அவர்களைக் குற்றமாய்த் தீர்க்கவும்படாது.

நாம் நியாயந்தீர்க்கப்பட்டுக் குற்றவாளிகளாய் வருவதுபோல மற்றவர்களும் அப்படியே வரவேண்டுமென்று நாம் விரும்பப்படாது. மறுபேரைப் பற்றி இவ்விதமாய் எண்ணுவது அநீதம். அப்படியே நாம் அநீதராயிருக்கத்தக்கதான அநேக வழிகளுண்டு. இவைகளெல்லாவற்றிலும் நாம் உய்த்துணர்ந்து செய்யவேணுமென்றெண்ணி மனங்கொண்டு அநீதஞ் செய்யக்கூடும். அல்லது அந்த அநீதம் யாதாமொரு மோசத்தால் அல்லது எங்களை அறியாமல் ஒரு பாட்டுக்கு மனதைச் சாய்ப்பதினால் வரக்கூடும். உதாரணமாக, சின்னத்தம்பி பெரியதம்பி என்ற இரண்டு பிள்ளைகளும் தங்கள் தோட்டத்திலே ஒரு நிழலொதுக்கைக் கட்டும்படி எண்ணியும் அது கட்டப்படும் இடமேதென்பதைப் பற்றி அவர்களுடைய எண்ணத்திற் பிசகு கண்டதினால் அவர்கள் இருபேரும் தங்களுடைய சகோதரியிடத்திற் கட்டுகிறதற்கேற்ற இடம் நல்லதென்று சொல்லும்படி கேட்டிருக்கையில், அந்த மூத்த பொடியன் தான் எண்ணின இடத்திலேதானே அந் நிழலொதுக்கைக் கட்டும்படி சொன்னாயேயானால் உனக்கொரு வாழைப்பழம் தருவேனென்று அவளை இரகசியமாய்க் கூட்டிக்கொண்டு போய்ச் சொல்லி அவளும் அவன் பட்சத்துக்குத்தானே தீர்த்து இளையவன் கட்டவேணுமென்று சொன்ன இடம் அனைத்திலும் உத்தமமாயிருக்கக்கொள்ள அவனுக்கு விரோதமாக அவள் தீர்ப்பைச் சொன்னாளேயானால் அவள் மனதார நினைத்துச் செய்யவேண்டுமென்றெண்ணிச்செய்த அநீதமென்னும் குற்றச்சாட்டேதுவளாயிருப்பாள். இன்னும் வாழைப்பழம் வாங்கினதினால் தனது சகோதரர் இருவரில் ஒருவர் பட்சத்துக்குச் சொன்னதினால் அவள் தான் மற்றவனுக்கு அநீதஞ்செய்கிறேனென்று அறிந்து அப்படியே மனங்கொண்டு எண்ணித் தப்பிதத்தைச் செய்கிறாள். இன்னும் அவள் அந்த மூத்த சகோதரனிடத்தில் யாதாமொரு கைக்கூலி வாங்காமலும், அவன் தனக்கு மற்றவனிலும் பட்சமுள்ளவனாய் இருக்கிறதினால் தான் அவனை மிகுதியும் நேசித்து வருவாளேயானால், அவன் பாட்டுக்கு அவள்கொண்டிருக்கும் வாரபட்சத்தினால் அவள் தன்னுடைய தீர்மானத்தைக் குருடாக்கி மற்றவனுக்கு விரோதமாகத் தான் செய்யவேணுமேயென்றெண்ணி அநீதஞ் செய்கிறேனென்றுணராமல் மூத்தவன்பாட்டுக்கே தீர்க்கிறாள். அநேகமாயிரம்விதமாய் எங்கள் விருப்பங்களினாலும் எண்ணங்களினாலும் எங்கள் மனதைக் குருடாக்குவதினால் நாம் அநீதராகிறோம். இது எண்ணி மனதாரச்செய்யவேணுமென்று செய்த பொல்லாப்பல்லாதிருந்தாலும் அப்படிச் செய்வதும் மெத்தத் தப்பிதம். ஆகையால் நாங்கள் எங்களைத்தானே மெத்தப் பத்திரமாய்ப் பார்த்துக்கொண்டு எமது தப்பெண்ணத்தினாலும் அல்லது எமது சிநேகிதர்களுடைய தப்பான பட்சத்தினாலும் நாம் நல்வழி விலகிப்போகாதபடி புத்தியாய்ப் பார்க்கவேண்டியது. ஒருவனுக்குச் செய்யவேணுமென்றெண்ணிச்செய்கிற அநீதம் மிகவும் குற்றமுள்ளதாயிருந்தாலும் நாம் மேற்சொல்லிவரும் அநீதமுந் தப்பிதமுள்ளதாயிருக்கின்றது. நாம் இப்போ சொல்லிவந்த இரண்டத்தொருவிதமாய் எமது சிநேகிதரை அநீதமாகவும் நெருக்கிடையாகவும் நடத்தும்பொழுது மனச்சாட்சி பெரும்பாலும் நாம் செய்யும் பொல்லாப்பை எமக்குக் காட்டுவதற்குச் சாக்கிரதையாயும், சாவதானமாயும், எத்தனமாயுமிருக்கின்றது.

நாம் அநீதராயிருக்கிறதற்கேற்ற பெரிய சோதனைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறோம். அப்படிப்பட்ட சோதனை வாராமல் தடுக்கிறதினாலே எமது கடமையையும், எமது மனச் சந்தோஷத்தையும் நாங்கள் அதிகரிக்கப்பண்ண ஏதுவாக்கிக்கொள்ளக்கூடும். எமது சிநேகிதர்களுக்குப்போகவேண்டிய உரித்தைக் கெடுப்பதினாலும் அவர்களுடைய சுகாநுபோகத்தை எடுப்பதினாலும், அல்லது அவர்களுக்குப்போகவேண்டிய பாகத்துக்கதிகமாக அவர்கள் மேற் சுமத்துவதினாலும் சிலலாபத்தை நாம் அடைந்துகொள்வது உண்மைதான். மறுபேருடைய உரித்தைக்கெடுத்துத் தங்களுக்காக்கிக்கொள்ளுகிறதினால் வரும் பலனைப் பார்க்கிலும் நாம் நீதியுள்ளவர்களாயிருக்கிறோமென்ற மனச் சந்தோஷமும், மனப்பாக்கியமும் மிகுதியும் பெரிதாயிருக்கின்றதென்று இதுகாரியத்தைப் பரிசோதனைபண்ணிப்பார்ப்பவர்க்கே தெரியும்.

### இரண்டாம் பாடத்திலுள்ள கேள்விகள்.

எமதெண்ணத்தில் நாம் அநீதராயிருக்கும்விதமென்ன?

அநீதமனைத்தும் எண்ணி மனதாரச்செய்யும் அநீதமென்னும் நிரையிற் சேர்ந்ததோ?

ஒருவன் அநீதனாயிருந்தும் அதைப் பற்றி ஒன்றும் உணராதவனாயிருக்கக்கூடுமோ?

சின்னத்தம்பி பெரியதம்பி என்ற இரண்டு சகோதரரைப் பற்றியுங் கூறப்பட்ட சரிதையைச் சொல்லு?

அதின் கருத்தென்ன?

Digitized by Google

## Principles on English Grammar.

**By William Lennie.**

### *Of Nouns.*

As the following words, from foreign languages, seldom occur, except a few, the pupil may very properly be allowed to omit them, till he be farther advanced.

| *Singular* | *Plural* | *Singular* | *Plural* |
|---|---|---|---|
| Animalculum | Animalcula | Focus | Foci |
| Antithesis | Antitheses | Genius | Genii † |
| Apex | Apices | Genus | Genera |
| Appendix | Appendixes or appendices | Hypothesis | Hypotheses |
| | | Ignisfatuus | Ignesfatui |
| Arcanum * | Arcana | Index | Indexes, or indices ‡ |
| Automaton | Automata | | |
| Axis * | Axes | Lamina | Laminae |
| Basis | Bases | Magus | Magi |
| Calx | Calces | Memorandum | Memoranda, or memorandums |
| Cherub | Cherubim or cherubs | | |
| | | Metamorphosis | Metamorphoses |
| Crisis | Crises | Monsieur | Messieurs |
| Criterion | Criteria | Phenomenon | Phenomena |
| Datum | Data | Radius | Radii |
| Desideratum | Desiderata | Stamen | Stamina |
| Diaeresis | Diaereses | Seraph | Seraphim, or seraphs |
| Effluvium | Effluvia | | |
| Ellipsis | Ellipses | Stimulus | Stimuli |
| Emphasis | Emphases | Stratum | Strata |
| Encomium | Encomia or encomiums | Vertex | Vertices |
| | | Vortex | Vortices |
| Erratum | Errata | Virtuoso | Virtuosi |

It was thought unnecessary to give a list of such words of our own; as, *snuffers, scissars, tongs,* &c. because they are evidently to be used as plural; but it may be proper to observe, that such words as, *Mathematics, Metaphysics, Politics, Ethics, Pneumatics,* &c. though generally *plural,* are sometimes *construed* as *singular,* as, Mathematics *is* a science; and so of the rest.

* *Rule.* Nouns in *um* or *on* have *a* in the plural, and those which have *is* in the singular have *es* in the plural.

† *Genii,* aerial spirits; but *Geniuses,* persons of Genius.—For what reason L. Murray, Elphinston, Oulton, and others pluralize such words as *genius* and *rebus,* by adding *ses* to the singular, making them geniu*sses*, rebu*sses*, instead of geniu*ses*, rebu*ses*, it is not easy to guess, as words ending with a single *s* are never accented on the last syllable, there can be no good reason for doubling the *s* before *es*. Hence Rule 2nd., page 7th, begins with "nouns in *s*," because those in s include those in *ss*.

‡ *Indexes,* when it signifies pointers, or tables of contents. *Indices,* when it refers to algebraic quantities.

---

### இங்கிலிசுப்பாஷையைக் கற்கப்புகு மாணாக்கருக் குபயோகமாகும்பொருட்டு வழக்கத்தமிழ் நடையாக மொழிபெயர்க்கப்பட்ட வில்லியம் லெனிஸ என்ற துரைஇங்கிலிசிற்செய்த இலக்கணச்சாரம்.

### சொல்லதிகாரம்.

பின்வரும் பிறபாஷை மொழிகளிற் சிலவற்றன்றி மற்றவை இங்கிலீசுப் பாஷையில் வழங்குதலரிதாகையால் மாணாக்களின்னுமதிகதூரம் படிக்குமளவும் அவைகளை இப்பொழுது படியாமல விடும்படி செய்வது மிகவுமுத்தமம்.

#### ஓர் புறனடை.

பகுபதவுறுப்புகளாகிய-கள்—அர்—என்னும் விகுதிகளை ஒருமைப் பேருக்குக் கூட்டுவதினுலே பன்மையுண்டாகுமென்றறிந்துகொள்ளுவது மிகவும் எளிதாயிருக்கின்றபடியால் இங்ஙனம் அந்தந்த ஒருமைப் பெயர்களின் பன்மையை எடுத்துக் காட்டாமல் விட்டுவிடுகிறோம்.

ஒருமை· கிருமி, முரண்டொடை, நுனி, அநுபந்தம், அந்தரங்கம்,* தாளுபியங்குஞ் சூத்திரம், காரசம்* ஆதாரம், பஸ்மம், ஓர்வகைச் சம்மனசு, அசாத்தியகுணம், சோதனைப் பிரமாணம், பூரண அத்தாட்சி, அபூருவமானது, உயிரினைஅசைப்பிரிவு, காற்றம், எஞ்சணி, வலியுறுத்தல், வாழ்த்து, அச்சுப்பிழை, கிரணங்கள் பொருந்துமையம், பூரம், விவேகி, குலம், உத்தேசம், கொள்ளி வாய்ப்பேய், அறிகுறி, அல்லது அட்டவணை, மெல்லிய தகடு, அல்லது படலம், மந்திரவாதி, ஞாபகக்குறிப்பு, உருமாற்றம், துரை, தோற்றவிகாரம், அரைவிட்டம், பூந்தாது, ஓர்வகைச் சம்மனசு, அருட்டுவிப்பவை, படை, பாளம், மலைச்சிகரம், உச்சி, சுழல்நீர், சித்திரவித்தாரன்.

எங்கள் பாஷைமொழிகளாகிய snuffers (திரிவெட்டி) scissars, (கத்திரிக்கை) tongs (குறடு) முதலானமொழிகள் பன்மையாகவழங்குதல் பிரத்தியட்சமாயிருக்கின்றமையால அவைகளை ஒரு இடாப்பாக எழுதுதல் அவசியமில்லை. ஆனால் Mathematics (கணிதநூல்) Metaphysics (தத்துவநூல்) Politics (நீதிநூல்) Athics (தருமநூல) Pneumatics (வாயுநூல்) முதலிய மொழிகள் சாதாரணமாகப் பன்மையாயிருந்தாலும் சிறிதுவேளை ஒருமைப் பொருளைக் கொடுக்கின்றன. கணிதநூல் ஓர் சாஸ்திரமாயிருக்கின்றதென்பதுபோல—மற்றவையும் இத்தன்மையவாம்.

---

* விதி Um, on எழுத்துக்களால் முடியும்பெயர்கள் பன்மையில் (அவ்வெழுத்துக்கள்கெட) a விகுதியைப் பெறும். ஒருமையில is எழுத்தை யீறாகவுடைய பெயர்கள் பன்மையில் es விகுதியையுடையன வாம்.

† genii என்பது ஆகாயத்தில் வசிக்கும் பூதங்களென்றும் geniuses என்பது விவேகிகளென்றும் பொருள்படும்.—L. Murray, Elphinston, Oulton இவர்களும் மற்றுமிலக்கணிகளும் Genius, Rebus (விடுகதை) என்ற இவ்வகை ஒருமைப்பெயர்களை geniuses, rebuses என்று பன்மையாக்காமல அவ்வொருமைப் பெயர்களோடே ses விகுதி கூட்டி geniusses, rebusses என்று பன்மையாக்கினதற்கு நியாயமின்னதென்றநுமானிப்பதரிது. தனி s எழுத்தால் முடியும் பெயர்களுக்கு ஈற்றசையில் ஒருபோதும் எடுத்தலோசையின்மையால் es விகுதிக்கு முன்னிற்கும் s எழுத்து இரட்டிப்பதற்குத் தகுந்த நியாயமிருக்கமாட்டாது. ஆகையால் எம் பக்கத்து இரண்டாம் விதி s எழுத்தால் முடியும் பேர்களென்று தொடங்கிற்று. அதேதெனில், s எழுத்தால் முடியும் பெயர்களென்பவை ss என்ற இரெழுத்தால் முடியும் பெயர்களுமடைத்தன.

‡ Index என்னுஞ் சொல் அறிகுறி அல்லது அட்டவணை என்றர்த்தங்கொள்ளும்பொழுது Indexes என்றும் வீசகணித அளவைக் குறிக்கும்போது Indices என்றும் (பன்மையில்) வரும்.

---

## COMMUNICATIONS.—கடிதங்கள்.

(Answer to an Arithmetical Query, and another one proposed.)

செகவிருணீக்குஞ் செஞ்சுடர்போலெம  
தகவிருணீக்கும்மாரருங் கதிரெனவே  
உதயதாரகைதனை உவப்புடன்விடுக்குந்  
துதிபெறுமைனத் துரைசமுகத்துக்கு,

ஐயரவே,

தங்கள் பிறகிட்ட மாதாந்தத்திற் பிரசுரஞ்செய்ததாரகை ௬ம். புத்தகம் ௰ ம்: பக்கத்தின் கண் அருணம்பலம் தியாகராயர் என்பவர் வினவிய முத்துமாலைக் கணக்குக்கு யானிங்ஙனம் எழுதும் விடையைத் தாரகையிற் பிரசுரஞ்செய்யத் தயைபுரிவீராக.

மேற்படி தியாகராயர் என்பவர் வினவிய கணக்கு எண்வகைக் கணிதங்களுள் முதற் கணிதமாகிய சங்கலிதத்தின் பலவகைப் பிரிவுகளையுடைய கலிதங்கட்கெல்லாமூலமாகிய கற்சங்கலிதத்தைக் கற்கும் சிறுவர்க்கோர் அப்பியாசப்பாடமேயன்றி மற்றோருமையான கணக்கன்றென்றெனது சிற்றறிவிற்குத் தோன்றுகின்றது. அக்கணக்கிற்கு முறையானவிதி கற்சங்கலிதத்தைக்கொண்டே கூறவேண்டுமையாலுந் தியாகராயரென்பவர் கற்சங்கலிதத்தைத்தாமறிந்திராதவராயானுந்தேசிக்கவேண்டுமையாலும்அந்கற்சங்கலிதத்துக்குங் கூட விதி கூறவேண்டியிருக்கின்றமையால், அப்படியான் கூறப்புகின் மிகவிரிவதுமன்றி மற்றொன்று விரித்தலென்னுங் குற்றத்துக்குமேதுவாகும். ஆகையால், அவ்வகை விதிகளை ஒழித்து அதற்குச் சூட்சமான ஓர் விதியைக் காட்டி அவ்விதிவழியே அக்கணக்கின் விடையையுந் தியாகராயர் விளங்கிக் கொள்ளுமாறுரைக்கின்றேன். எவ்வகையெனின்,

அம்மாலையில் ஒரு வராகன் முத்தாகிய முதன் முத்தும், பதினுபிரம் வராகன் முத்தாகிய கடைமுத்தும் இவ்விரண்டு முத்துக்க

Digitized by Google

ளும் ஒன்றேடொன்று ஒரோராசியாய்ப் பொருந்துமாறுபொருத்தி அதன்பின் அம்மாலையைச் சரியிரண்டாய் மடித்தபின்னர் இவ்விரண்டு பட்டுகளிலுஞ் சரியாய் அடுக்காகவே ஒவ்வொரு பிள்ளையின் தொகையாகிய நூறுமுத்துக்களுமெடுத்துக்கொள்ளவேணுமெனக்கொண்டு அவ்விரண்டு பட்டுகளிலுமுள்ள முத்துக்களை ஐம்பதைம்பதாகப் பிரிவுகாண- பட்டொன்றுக்கு நூறுநூறாக இருநூறு பிரிவு வரும். ஆதலால் ஒவ்வொரு பிள்ளைக்கும் அப்பிரிவுகளிலிரண்டிரண்டு பிரிவுகளாக நிரையடுக்காகவே ஒருபட்டின் முதற்பிரிவாகிய முதலாம் முத்துமுதல் ஐம்பதாம் முத்துவரைக்குமுள்ள முத்துகளைம்பதையும், மற்றப்பட்டில் முதற்பிரிவாகிய பதினாயிரமாமுத்துமுதல் ஒன்பதினாயிரத்துத்தொள்ளாயிரத்தைம்பத்தோராம் முத்துவரைக்குமுள்ள முத்துக்களைம்பதையுஞ் சேர்த்து இந்நூறு முத்துக்களை முதற் பிள்ளைக்கும் இவ்விதமாக நிரையடுக்காகவே இரண்டு பட்டுகளிலும் ஒவ்வொரு பிரிவாக இவ்விரண்டு பிரிவுகளை நவ்வொரோவ்வொரு பிள்ளைகளுக்குக் கொடுக்க அப்பிள்ளைகளுள் ஒவ்வொருவர்க்குங்கிடைத்த முத்துக்களின் தொகையும் விலையும் ஒத்திருக்குமென்றறிக.

இஃதுநிற்க, கணிதத்துள் ஐந்தாவதாகிய வற்கத்துள்யானுமோர் வினவை வினவ அவசியமுற்றிருப்பதால் அத்தையும் இதன் பின்னெழுதலுற்றேன்—அதாவது,

தியாகராயா கூறியபடி ஒரு இராசாவுக்கு நூறு பிள்ளைகளும் பதினாயிரமுத்துக்களுமுள்ள ஒரு முத்துமாலையுமுண்டு. அம்மாலையிலுள்ள முத்துக்களின் விலையோ-முதன்முத்துக்கொவ்வொருவராகனும் இரண்டாம் முத்துக்கு நான்குவராகனும்மூன்றும்முத்துக்கு ஒன்பதுவராகனுமாக இவ்வடையே அம்மாலையிலுள்ள ஒவ்வொரு முத்துக்கும் வற்கசங்கவிதமுறையாகவே விலைபெறியிருக்கும். அவவிராசனுமிறந்துவிட்டார். அவர் பிள்ளைகள் நூறுபேரும அம்மாலையிலுள்ள பதினாயிரமுத்துக்களையுமுருத்தொகையும் விலைத்தொகையும் ஒத்திருக்குமாறெப்படிப் பிரித்துக்கொள்ளலாமென்பதும், அதற்குவிதியேதென்பதும் என் சிற்றறிவிற்குத் தோன்றுமையால் முற்றறிவுள்ள கணிதர்கணிதற்கோர் விதியைத் தாரகைவழியாய்த்தயை செய்தறிவிக்கப் பிரார்த்திக்கிறேன். அப்படியறிவிக்கும் விதியானது யாவரும் விளங்குமாறுதாரணத்துடனிருக்கவேண்டும்; விடையுங்கூறுல மிகப்பெருக்குயாதலால் விதியையே வேண்டிநிற்கின்றேன்.

இப்படிக்கு
யாழ்ப்பாணம் திருவண்ணை நகர் வைத்தீசுரன் கோவில்மேலண்டைவாடையிலிருக்கும கோவசியன் ஆறுமுகம்பிள்ளை.

---

உதயதாரகைப்பத்திரத்தின் ஏடிற்றரவர்களுக்கு,

அய்யாவே,

இதினடியில் யான் எழுதுகிறதைத் தங்களுத்தமபத்திரிகையிற் பிரசுரஞ்செய்வீர்களென்று நம்பியத்தைத் தங்களுக்கனுப்புகிறேன், அதாவது.

வெண்பா,

பூங்காவிலோர் மரத்திற் கண்டபவம் போக்கிடவே-தூங்கியே
யோர்மரத்திற்றூஞ்சியே, பாக்குடங்கை-துங்கமறை மேற்றவழுந்
தூயமரி நாயகியின-சங்கமிதில்வந்தருளைத்தா.

சிந்து, சங்கம்வாழி திருப்பணிச் சங்கம்வாழி,
திங்கள்பருதியுடு மங்குலவனியொடு சேருமதலமறை நேரும்பரனூர்மறைச், சங்கம்வாழி,
பங்கச்சமயவாதம் மங்கச்செய்தவன்பாதம் பலரும்பணியப்போதம் இலகுஞ்சத்தியவேதம் எங்கும்பெருமைபொங்கத் துங்கமிகவேதங்க ளுகமும்பரமுமெய்ய எவருந்தருடஞ்செய்ய, சங்கம்.

கலித்துறை.

வானேபரனின் வலமோயகத்துவ மாதிவஞ்சி-யோனேவடியவ
ருள்ளங்காலோ வளபுடையவிராத்-நீரேயொவிவ மலையேசமலை
யிடைச் செப்புமறை-தானேபரகுருவே நீதரித்திடச் சங்கமிதே.

இப்படிக்கு
கொழும்பில் பன்னத்தெருவில
௲அ௱சக௲. மாசிமீ. உயதி. பிரஞ்சிலசகு அம்லவைப்பிள்ளை.

---

உதயதாரகையின் ஏடிற்றரவர்களுக்கு நமஸ்காரம்

அய்யாவே,

தங்களுடைய உதயதாரகை இரண்டாம்புத்தகம் பதினொராஞ்சஞ்சிகை அற்றமுப்பத்தோராம் பக்கத்தில் மதுரை குமாஷ்தா பெரியசாமிப்பிள்ளை குமாரன் முத்துக்கருப்பபிள்ளை அவருமேற்படி இரண்டாம்புத்தகம் பன்னிரண்டாம்சஞ்சிகை நூற்றநாற்பத்தாறும்பக்கத்தில் விநாயகமூர்த்திியென்றவரும் இரண்டுபாட்டைப் பிரசுரஞ்செய்து அதின் கருத்தைத் தாங்களறியாதது போல, அறிவோரதின்கருத்தை உதயதாரகையின்வழியாய் அறிவிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். அப்படியேயாராகுதல் அதின் கருத்தையறிவிப்பார்களென்று இன்னுள்மட்டும் காத்திருந்தும் ஒருவராகுதல் அதின்கருத்தை எழுதாததினால் மேற்சொல்லப்பட்ட குமாஷ்த்தா பெரியசாமிபிள்ளை குமாரன முத்துக்கருப்பாபிள்ளை அவரையும் விநாயகமூர்த்தியென்றவரையும் மிகுந்தயுபகாரமாகக்கேட்டுக்கொள்ளுகிறதென்னவென்றால் அவர்கள்தாங்களையதின்கருத்தை இந்தச் சங்கைபொருந்த பத்திரத்தின்வழியாயறிவிக்கும்படி அவர்களைவேண்டி நிற்கிறேன்.

கொழும்பில் புதுத்தெருவில் இப்படிக்கு
௲அ௱சக௲ மாசிமீ உயதி வேடிக்கைவிரும்பி

---

## வியாதித் தொகைவினா.

(Catalogue of diseases mentioned in native medical works.)

பலகலையுணர்ந்த டத்திராதிபர்பாதாம்புயத்திற்கு வந்தனம்.

ஆயுள்வேதத்தில் வல்லவர்களே, அனைவருக்குந் தோத்திரம். அறைவேனையமாத்திரம்—அஃதென்னவெனில், சுரம் ௯௪, இருமல் ௫, மலக்கட்டு ௫, சயம் ௭. தொண்டைக்கம்மல் ௯. சத்தி ௫, இருத்துரோகம் ௫, உடம்பெரிப்பு ௫, ஞானப்பித்தம் ௪, மூச்சு ௫, மூலம் ௯ அதிசாரம் ௯, அசிரணம் ௪, கிராணி ௪, விருணி ௫, மூத்திரக்கிரிச்சம் ௨௰, பவுத்திரம் ௰, விப்புருதி ௮, குன்மம் ௮, சூலை ௭, பீலிகை ௮, பாண்டு ௫, காமாலை ௯, விக்கல் ௭, விஷபாகம் ௯, குட்டம் ௰௮, வெதுப்பு ௩, உடவிற்புழு ௨௰. வாதம் ௮௰, பித்தம் ௰, பிரம்மை ௨௰, சேட்டுமம் ௨௰, குணியவிதம் ௯, யோனிரோகம் ௯, புண்குடிலம் ௮, கண்டமாலை ௯, கழுத்துவியாதி ௰௯, எவிகடி ௰௮, புழுமேய்ச்சல் ௰, தேட்கடி ௮௮, பித்தவிஷம் ௩௨, பாம்புவிஷம் ௰௮, என்புபற்றியவியாதி ௯, நீரைப் பற்றியவியாதி ௭௮. உதிரத்தைப்பற்றியவியாதி ௪, மாமிசத்தைப் பற்றிய வியாதி ௪, தலையில்வியாதி ௮, மூளையில் வியாதி ௫, மண்டையில்வியாதி ௯, கன்னத்தில் வியாதி ௮, கையில் வியாதி ௰௯, மூக்கில்வியாதி ௮, காதில்வியாதி ௰௮, பக்கப்பிளவை ௰, பீனிசம் ௯. சிலந்தி ௰௯, ஒட்டியபுண் ௰௮, கரப்பன் ௩௨, வண்டுகடி ௯௯, பூராங்கடி ௫௫, தேயல் ௰௮, நடுக்கல் ௰௫, கழிச்சல் ௨௪, புழுவெட்டு ௰௮, நகத்திலவியாதி ௰௫, கள்ளன்வகை ௨௰, மார்த்தம் ௨௰, எழுவான்படுவன் ௰௨, முயற்கண் ௰, நரிவாதம் ௰, காக்கைவலிப்பு ௰, உட்குற்று ௨௰, அரையாப்பு ௰௨. இந்திரியரோகம் ௮௰, மலடிவாதம் ௰, உளருவகை ௯, படுவன் ௰௮, அக்கரம் ௰௫. வட்டாய் ௫. குடலவாதம் ௫, குட்சிச்சூலை ௪, குதகவாயு ௫, கூசவாயு ௰, நீர்க்கோவை ௫, வெப்புப்பார்வை ௫, பிறிவுப்புண் ௪, யோனிப்புண் ௮, பெருவியாதி ௨௪, அழுகணி ௮, படர்தாமரை ௫, உதரவலி ௫, கந்தவாயு ௰, உண்ணாக்கு ௫, ஒசி ௫, அண்ணாக்கு ௩, தொண்டையடைப்பன் ௫, யோனியடைப்பன் ௰, கல்லடைப்பன் ௯, துடிப்புவகை ௫, இங்ஙனம் வரைந்ததொகைப்பெயர்விடாதக்கெல்லாமவகைப்பெயர்தாரகை வழியாய்க் காட்டவும். எம்மிதயவிருளையோட்டவும நுமதுகீர்த்தியை நாட்டவும் திண்மேனுமையமின்றித்திட்டவும் தயைபுரிவீர்களாக.

இப்படிக்குத் தமிழ்ப்புலவர் வேதகிரிமுதலியார் மாணாக்கன்
சுப்பிரமணியன.

---

## (அரும்பதவினா.)—நாலடியார்.

(Explanation of certain words requested.)

அறுசுவையுண்டியமர்ந்தில்லாளூட்ட—மறுசிகைநீக்கியுண்டாரும் என்றதில்—மறுசிகைக்குப்பொருளின்னதென்றும், அந்நாளுட்டானே-பருவபெண்ணத்தன் பல்வின்பாலேலை பிருசிகையுமுண்டிரோவென்று—என்றதில, இருசிகைக்குப்பொருளின்னதென்றும், விளங்கவில்லையாகலான். கற்றுணர்ந்த நல்லோர்களே முற்றுணர்ந்த வல்லோர்களே இவ்விருசொற்களையத்தைத் தீருங்கள், இலக்கியச் சாட்சிதாருங்கள், உங்களுக்குக் கீர்த்தி, எங்களுக்குப் பூர்த்தி.

இப்படிக்குத் தமிழ்ப புலவர்வேதகிரிமுதலியார்
மாணாக்கர்கள் அண்ணாமலையார்,——ஆறுமுகவர்.

Digitized by Google

## கிறிஸ்துமதம்.—CHRISTIAN.

### RULES FOR THE CONDUCT OF A CHRISTIAN LIFE.

Abridged from "the practice of True Devotion" by Robert Nelson Esq.

READING.—Food is not more necessary to our bodies, than reading the Holy Scriptures and spiritual books is for the nourishment of our souls. It is unaccountable to see how many men amuse themselves with trifles for hours together, and how few find leisure to peruse practical treatises of religion. As bad books are very pernicious, so good ones are very useful and profitable; they enlighten our understandings, and teach us the practice of piety and holiness, they stir up our wills, and inflame our affections, and make us readily choose and pursue the service of God; they are preachers ready at hand, that we may consult with when we have a mind to it.

It is better to read a little with attention, than to read a great deal, and be never the better for it. Let not curiosity, and a thirst of knowledge only, be the motive of your reading; but let your chief aim be, to become thereby more holy and sanctified. Sometimes in reading, raise up your mind to God and beg his grace to make it profitable to you; dwell a little upon any passage that sensibly affects you, and consider of the best means whereby you may put in practice what you have read.

Never suffer bad books to be your entertainment, such as undermine the principles of the Christian religion, or corrupt the purity of morality, by putting fair colours upon the worst of crimes, by stirring up our passions to forbidden objects, and by filling our heads with romantic notions of love and honour. Never pretend that in such discourses you will pick out the good, and leave the bad; the reading of one side will insensibly draw you on to another, and those trifles will so fix themselves in your imagination, that when you would get rid of them, you will not be able: besides, they who give themselves up to the reading of romances and amorous poetry, which generally insinuate the grossest concupiscence under the notion of love, are frequently so betwitched by them, that it takes up a great deal of their time, and no arguments can prevail upon them to quit such an unjustifiable practice.

---

### வாசினை.

எமதாத்துமவளர்த்திக்காக வேதவாக்கியத்தையும் பேரறிவுள்ள புத்தகங்களையும வாசிப்பதைப்பார்க்கிலும், போசனமெமது சடத்துக்கவசியமல்ல, எவ்விதமாய் அநேகா நெடுநேரமாகச்சொற்பகாரியங்களைப் பேசுவதில் தங்கள் நேரத்தைப் போக்குகிறார்களென்றும். இன்னுமெவ்விதமாய்ச் சிலர் மார்க்கசாதனைக்கடுத்த புத்தகங்களை வாசிப்பதற்கு நேரத்தைப் பிடித்துக்கொள்ளுகிறார்களென்பதையும் பார்ப்பது தகுதியின்று. கெட்டபுத்தகங்கள் கேட்டைவருவிப்பது எவ்வளவு நிச்சடமோ அவ்வளவே நல்லபுத்தகங்கள் நன்மையையும் பிரயோசனத்தையும் பயக்கிறதாயிருக்கின்றன. அவைகளெமமனதைச் சீராக்கித் தேவபத்தி, பரிசுத்தமென்பவைகளின் பரிசனையைப் பற்றி எமக்குணர்த்தி எங்கள் மனதையெழுப்பி அவைகளை எமக்குக்கொடுத்து உடனே பராபரனுக்குச் செய்யவேண்டிய ஊழியத்தைத் தெரிந்து பின்பற்றும்படிபண்ணுகின்றன. நாம் பிரியப்படுமெவ்வேளைகளிலும் கூடியாலோசனைபண்ணத் தக்கவிதமாய், அவைகள் கிட்டவிருக்கும பிரசங்கிகளுக்குச்சமானமாயிருக்கின்றன, அதிகமாய்வாசித்து அதனால் யாதுமொரு நன்மையடையாமலிருப்பதைப் பார்க்கிலுங் கொஞ்சமாய்க் கவனத்துடன் வாசிப்பது அதிகவசி. நீங்கள் வாசிக்கும்பொழுது ஞானத்தை அறிய அல்லது அறிவையடைந்துகொள்ளவேண்டுமேயென்ற இச்சைக்காகமாத்திரமவாசியாதையுங்கள், அப்படிவாசிப்பதினால், பரிசுத்தமும் மனச்சுத்தமுமுள்ளவர்களாய் வரவேண்டுமென்ற நோக்கத்துடன் வாசியுங்கள். சிலவேளை நீங்கள் வாசிக்குமபொழுது உங்களிதயத்தைப் பராபரனிடத்துக்கேறெடுத்து உங்கள் வாசினை உங்களுக்கு நன்மையாய்வரும்படி அவருடைய கிருபையைத்தரும்படி மன்றாடிக்கேளுங்கள். உங்கள் செய்கைக்குத் தகுந்ததாய் யாதாமொரு வாக்கியத்தைக் கண்டீர்களானால், எவ்விதகுணத்துடன் அதைவாசித்து உங்கள் நடபடிக்கையைக்கொண்டுவருவீர்களென்பதைநினைத்துப்பாருங்கள்.

கிறிஸ்துமார்க்கத்தின் மூலாதாரப்போதனையையழித்து அல்லது சகலத்திலும் பெரிய குற்றங்களுக்கிடங்கொடுத்துச் செய்யவேண்டாமென்று சொன்னகாரியங்களைச் செய்யுமபடி எங்களிச்சைகளையெழுப்பி நேசத்திலும் கனத்திலும் வரும கட்டுக்கதைக் கடுத்த எண்ணங்களினாலே மனிதரின் நினைப்பை எழுப்புவதாகிய அப்படிப்பட்ட கெட்ட புத்தகங்களை உங்கள் விநோதத்துக்கென்று வாசியாதையுங்கள். அவ்வித பொத்தகங்களை வாசிக்கும்பொழுது நன்மையைத்தெரிந்துகொண்டு தீமையை விலக்கிக்கொள்வோமென்று நினையாதையுங்கள். ஒருபக்கத்தை வாசித்தபின் மற்றப்பக்கத்தையும் வாசிக்கவேண்டுமெனப் பிரியங்கொள்ளும்படி மனமெண்ணும். அப்படிவாசித்ததினால் மனதில்வந்த அற்பமானகாரியங்கள் யாவையும் நீக்கிப்போடவேணுமென்றெண்ணும்போது அவைகள் நீக்கிப்போடக்கூடாத அவ்வளவு பெலனாக உரங்கொண்டிருக்கும். அதுவுமல்லாமல் கட்டுக்கதைகளையும் சிற்றின்பப் புலமைகளையும் வாசித்து அதினால் நேசமென்றெண்ணப்படத்தக்கவிதமாய் இச்சைக்குட்படுகிறவர்கள் அதிகநேரம் அதிற்செலவழிக்க வேண்டியதாயனுப்பப்படுகிறார்கள். அப்படிப்பட்ட கெட்டபழக்கத்தை விட்டுவிடும் வெவ்விதபுத்திமதிகளைச் சொன்னாலுங் கேளார்கள்.

---

### Scriptural Proofs of the Doctrines and Duties of Christianity

*God's Power.*

"Thine, O Lord, is the greatness, and the *power*, and the glory, and the victory, and the majesty; for all that is in the heaven, and in the earth, is thine; thine is the kingdom; O Lord, and thou art exalted as head above all."—1. Chron. xxix. 11.

"Thine is the kingdom, and the *power*, and the glory for ever."—Matt. vi. 13.

"How great are his signs, and how *mighty* are his wonders! His kingdom is an everlasting kingdom, and his dominion from generation to generation!"–Dan. iv. 3.

"O Lord of hosts, who is a *strong* Lord, like unto thee."—Psalm lxxxix. 8.

"Both riches and honour come of thee, and thou reignest over all; and in thy hand is *power* and *might*, ande in thine hand it is to make great, and to give strength unto all."—1. Chron. xxix. 12.

"What God is there in heaven, or in earth, that can do according to thy works and according to thy *might*."—Deut. iii. 24.

"The Lord said, I am the *Almighty* God."—Rev. i. 8.

"Who hath *measured* the waters in the hollow of his hand, and *meted* out heaven with the span, and *comprehended* the dust of the earth in a measure, and *weighed* the mountains in scales, and the hills in a balance."—Isa. xl. 12.

"I have made the earth, the man, and the beast that are upon the ground, by my great *power*, and by my outstretched arm, and have given it unto whom it seemed meet unto me."—Jer. xxvii. 5.

"Thou art worthy, O Lord, to receive glory and honour, and *power*, for thou hast created all things, and for thy pleasure, they are, and were created."

Rev. iv. 11.

---

### பராபரன் கடையிலா வீரியத்தையுடையவர்.

கர்த்தராகிய உமக்கு மகிமையும், வல்லமையும், முக்கியமும், செயமும், மகத்துவமும் உண்டாவதாக. ஏனென்றால் வானத்திலும், பூமியிலுமுள்ளதெல்லாம் உமமுடையது. கர்த்தாவே! இராச்சியமும் உம்முடையது; தேவரீர் எல்லாரின் மேலும் தலைவராயுயர்ந்திருக்கிறவர். ௧. நாளா. ௨௯. ௰௧.

இராச்சியமும், வல்லமையும், மகிமையும் உமக்கே என்றென்றைக்கும் உண்டாயிருக்கின்றது. மத். ௬. ௰௩.

அவருடைய அடையாளங்களெத்தனை மகத்துவமும் அவருடைய அற்புதங்கள் எத்தனை வல்லமையுமாயிருக்கின்றது. அவருடைய இராச்சியமும், அவருடைய ஆளுகையும் தலைமுறைதலைமுறையாக நிற்கும் தானி. ௪. ௩.

சேனைகளின் பராபரனாகிய கர்த்தாவே, கர்த்தராயிருக்கிற உம்மைப்போல வல்லமையுள்ளவரார். சங். ௮௯. ௮.

இந்த ஐசுவரியமுங் கனமும் உம்மாலே உண்டாயிருக்கின்றது. தேவரீர் எல்லாவற்றையும் ஆளுகிறவர். உமமுடைய கரத்திலே பலனும் வல்லமையும உம்முடைய கரத்திலிதையெல்லாம் பெருகவும் பலக்கவும் பண்ணுதலுமிருக்கின்றது. ௧. நாளா. ௨௯. ௰௨.

வானத்திலும் பூமியிலும் உமமுடைய கிரியைகளுக்கும் உம்முடைய வல்லமைகளுக்கும ஒத்ததாகச் செய்யத்தக்கதேவனார்? ௫. மோசே. ௩. ௨௪.

